
பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 22 ஞாயிற்றுக்கிழமை 06.03.2022 கதிர் 347



## வெடிபொருள்களை வீட்டில் வைத்திருந்த தம்பதி கைது

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலைப் பகுதியில் வீட்டில் வெடிபொருகள் வைத்திருந்த கணவனும் 2

# வவுனியாவில் கோர விபத்து; தந்தை, மகன் பரிதாப மரணம்



### பஸ் மீது பொதுமக்கள் தாக்குதல்



(வவுனியா நிருபர்)
வவுனியா, பூவரசங்குளம், குருக்கள்புதுக்குளம் பகுதியில் இன்று காலை 9 மணியளவில் பஸ் - மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா - மன்னார் வீதி, குருக்கள்புதுக்குளம் பகுதியில் உள்ள ஒழுங்கை ஒன்றில் இருந்து பிரதான வீதிக்கு மோட்டார் சைக்கிள் ஒன்று 2

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அரசு முழுமையாக நீக்கவேண்டும்



### நுவரெலியாவில் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என அனைத்து இன மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். ஆதரவு தெரிவித்து கையொப்பம் இடுகின்றனர். எனவே, இந்தச் சட்டத்தை அரசு முற்றாக நீக்க வேண்டும். 2

### வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக

## கோட்டாவின் இல்லத்துக்கு முன்னால் திரண்ட சஜித் அணியின் மகளிர் படை



அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணியினர் மிரிஹானவிலும் ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 2

## விமல், கம்மன்பிலவுக்கான பாதுகாப்பைக் குறைக்காதீர்!

### பிரதமர் மஹிந்த அதிரடி உத்தரவு



அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்குத் தொடர்ந்தும் 2

## விமல், கம்மன்பிலவை வெளியில் விடாதீர்கள்!

### திலும் திடீர் 'பல்டி'

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, 2

## 'மொட்டு'வை உதறிவிட்டு தனிவழி செல்கிறது சு.க.

### தொகுதி அமைப்பாளர்கள் பச்சைக்கொடி

ஸ்ரீ லங்கா நிதஹஸ் பக்ஷய
இலங்கை சுதந்திரக் கட்சி
SRI LANKA FREEDOM PARTY

நாட்டில் அடுத்து நடைபெறும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்துக் களமிறங்க வேண்டும் என்று அக்கட்சியின் அனைத்து தொகுதி அமைப்பாளர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர். 2




## மக்களைத் தவறாக வழிநடத்தியவர்களை எமது கட்சியில் இணைக்கத் தயாரில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



விமல்வீரவன்ஸ, உதயகம்மன்பில போன்றவர்களின் செயற்பாடு எமக்குத் தெரியும். அவர்கள் மக்களைத் தவறாக வழிநடத்தினர். அப்படியானவர்களை எமது கட்சியில் இணைத்துக்கொள்ளத் தயாரில்லை.

- ஐக்கிய மக்கள் சக்தி 2

## விமல், கம்மன்பிலவுக்கான.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சரவை அமைச்சர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புக்குச் சமமான பாதுகாப்பை வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பொதுவாக இரண்டு பாதுகாவலர்கள் மாத்திரமே வழங்கப்படுகின்றது.

எனினும், அண்மையில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கான பாதுகாப்பு வழங்கிய அதிகாரிகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவிருந்தது. இந்நிலைமையில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர் விமல் மற்றும் கம்மன்பில ஆகியோர் அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்திருந்தனர். அதற்கமைய அவர்களின் பாதுகாப்பைக் குறைக்க வேண்டாம் எனவும், அமைச்சர்களுக்கான பாதுகாப்பைத் தொடர்ந்து வழங்குமாறும் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

## விமல், கம்மன்பிலவை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகிய இருவரையும் அரசில் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அதற்கான சமரசப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை மட்டும் கருதி, சில தரப்புகளால் முன்வைக்கப்படும் யோசனைகளை எல்லாம் ஏற்றுச் செயற்பட முடியாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசியலில் இருந்து வெளியேறுவதாக இருந்தால் வெளியேறட்டும். அதனை நாம் தடுக்கவில்லை. ஆனால், விமல், கம்மன்பில போன்றவர்களைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். மைத்திரிபால சிறிசேன வழமைபோல் தனது வேலையை விமல், கம்மன்பில போன்றவர்களுக்குக் காண்பித்துவிட்டார். பங்காளிக் கட்சிகளின் மாநாட்டுக்கு வருகை தந்த அவர், பங்காளிக் கட்சிகள் நடத்திய ஊடக சந்திப்புக்கு வரவில்லை. எனவே, நம்ப வைத்துக் காலைவாரிவிட்டார் என்றார்.

## கோட்டாவின்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய மக்கள் சக்தியின் ஹிருணிகா பிரேமச்சந்திர தலைமையில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கோரி இவர்கள் மிரிஹானவில் போராட்டத்தில் ஈடுபட்டனர். மிரிஹான சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்னர் ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கிச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனை சமூக ஊடகங்களில் பதிவு செய்துள்ள ஹர்ஷ டி சில்வா, ஹிருணிகா தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் துணிச்சலான சில பெண்கள் ஜனாதிபதியின் இல்லத்துக்கு வெளியே காணப்படுகின்றனர்.

அவருக்கான மனுவைக் கையளித்த பின்னர் அவர்கள் தமது ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்துள்ளனர். மக்கள் நெருக்கடியில் சிக்கித் துயருகின்றனர் என்பது ஜனாதிபதிக்குத் தெரியுமோ தெரியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற முற்பட்டுள்ளது. இதன்போது மன்னாரிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் பஸ் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள், பஸ்ஸின் கீழ்ப்பகுதியில் சிக்குண்டது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். இதையடுத்து அப்பகுதி மக்கள் இணைந்து பஸ்ஸின் மீது தாக்குதல் மேற்கொண்டு பஸ்ஸின் கண்ணாடிகளைச் சேதப்படுத்தியுள்ளனர். இதனால் அப்பகுதியில் பதற்ற நிலைமை நிலவியது. பூவரசங்குளம் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்த விபத்தில் 35 வயதுடைய தந்தை மற்றும் 17 வயதுடைய மகன் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். (100)

## மக்களைத் தவறாக.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். நாட்டை மீட்டெடுத்து, மக்களைப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது. எனவே, மக்கள் ஆணை வழங்கினால் ஆட்சியைப் பொறுப்பேற்று, சிறந்த நிர்வாகத்தை வழங்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய மக்கள் சக்திக்கு தேசிய வேலைத்திட்டமொன்று உள்ளது. அரசியல், பொருளாதாரம் மற்றும் மக்களை பாதுகாக்கும் திட்டங்கள் எம்மிடம் உள்ளன. தற்போது பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதற்கான திட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. பல தரப்புகளிடம் இருந்து ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்களை நீக்கியமை அரசின் முடிவாகும். மஹிந்த சிந்தனை உட்பட அரசின் திட்டங்களின் பின்னணியில் இவர்களே இருந்தனர்.

எனவே, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அவர்களும் பொறுப்புக்கூறவேண்டும். அவர்கள் அரசுக்குள் தொடர்ந்தும் இருந்து முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ளவே முற்படுகின்றனர்.

அமைச்சரவையை மாற்றுவதால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. இந்த அரசில் உள்ளவர்கள் பலவீனமானவர்கள் என்பதாலேயே அடிக்கடி மாற்றங்கள் இடம்பெறுகின்றன.

அதேவேளை, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்களின் செயற்பாடு எமக்குத் தெரியும். அவர்கள் மக்களைத் தவறாக வழிநடத்தினர். அப்படியானவர்களை இணைத்துக் கொள்வது பற்றி சிந்திக்க வேண்டிவரும்.

அரசில் இருந்து வெளியேறுபவர்களை எல்லாம் இணைத்துக் கொள்ளும் அளவுக்கு எமது கட்சி பலவீனம் அடையவில்லை - என்றார்.

## மொட்டுவை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு, இறுதி முடிவெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது .

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கான விசேட கூட்டம் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. கட்சியின் ஏற்பாட்டுப் பணிகள், அரசுக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமை உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அவ்வேளையிலேயே அடுத்து நடைபெறும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும் எனத் தொகுதி அமைப்பாளர்கள் யோசனை முன்வைத்து, ஏகமனதான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஆராய்ந்து இறுதி முடிவெடுக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

## பயங்கரவாதத் தடுப்பு..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நுவரெலியா நகரில் இன்று கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது 40 ஆண்டுகாலமாகத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இடையிடையே சிங்கள இளைஞர்கள் தண்டிக்கப்பட்டனர். தற்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராக மிக மோசமாக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராகப் போராடுபவர்களை ஒடுக்குவதற்கும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு அரசு தயாராகி வருகின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடாகும். இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் இதனையே வலியுறுத்துகின்றனர்.

எனவே, இது மக்கள் கோரிக்கையாகும். அதனை அரசு நிறைவேற்ற வேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் பெரும் ஆதரவு கிடைத்துள்ளது- என்றார்.


## வெடி பொருள்களை..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மனைவியும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்படி வீட்டில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கணவனும் மனைவியும் போரின் போது கைவிடப்பட்ட வெடிகுண்டுகளை உடைத்து வீட்டில் வைத்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்போது வெட்டி எடுக்கப்பட்ட வெடிகுண்டுகளும், வெடிபொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட குடும்பப் பெண் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டவேளை அவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட குடும்பத் தலைவனைப் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் 72 மணித்தியாலங்கள் தடுத்துவைத்து விசாரணைக்குட்படுத்த நீதிமன்றின் அனுமதியைப் பொலிஸார் பெற்றுள்ளனர்.




N Flash Super Detergent
வேலை வாய்ப்பு
வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்
தலைமை கணக்காளர் - 20 வருட அனுபவம்
கணனி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்
சாரதி – Light vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)
மேற்பார்வையாளர் - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர் - வாகன உதவியாளர் (பெண்)
ஆசிரியர் - தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை
வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள் தேவை
இரத்திரனியல் வெதுப்பக வேலையாள் - ஆண் (முன் அனுபவம் உடையோர்)
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் போன்ற நொறுக்குத்தினிகள் தயாரிப்பவர்கள் (ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி – விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்
EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை.
தகுதிவாய்ந்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.
வட்ஸ் அப் - 0779635551
முகவரி – 186/11 NFlash super detergent
நெசவுசாலை வீதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607 A கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தவறு எங்கே தொடங்கியது?

நாட்டின் இன்றைய பரிதாப நிலைக்கு – மோசமான பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிக்கு – பலரும் கூறும் காரணம் ஒன்றுதான். அது பொருத்தமற்ற அரசியல் தலைமையும், அதன் எதேச்சாதிகாரப் போக்கும் என்பதுதான்.

ஜனநாயக முறை செயற்பாடு வேறு. இராணுவப் பாணி நிர்வாகம் வேறு.

முதலாவதில் இரண்டாவதென இணைத்தால் உத்தமமான ஆட்சிக் கட்டமைப்பு ஒன்று உருவாகும் என நம்பி – கருதி – எதிர்பார்த்து – வாக்களித்தனர் பெரும்பான்மை மக்கள்.

ஜனநாயக ஆட்சி முறைக்குள் இராணுவப் பாணி நிர்வாகத்தை இணைத்ததால் ஏற்பட்ட கலப்பு உயர் ரகமாக அமையவில்லை. மாறாக கீழ்த்தரமாக அமைந்துவிட்டது. அதுதான் இலங்கையின் இன்றைய பரிதாப நிலைக்குக் காரணம்.

ஜனநாயக நிர்வாக முறைமையுடன் இராணுவப் பாணியிலான கண்டிப்பு, இறுக்கம், உறுதி, தீர்க்கமான செயற்போக்கு பாரபட்சமின்மை போன்றவற்றை இணைத்தால் உயர் தரப் பெறுபேறு கிடைக்கும் என்று நம்பினார்கள். ஆனால் வந்த கலப்பு விளைவோ ஜனநாயகத்தின் அடிப்படை பண்புகளான கலந்துரையாடல், பலதரப்பு கருத்துக்களையும் செவிமடுத்து, கவனத்தில் எடுத்து, பரிசீலித்தல், ஒன்றுபட்டுத் தீர்மானித்தல், எடுத்த தீர்மானத்தில் ஐக்கியப்பட்டு நிற்றல் என்பனவற்றை எல்லாம் தகர்த்து, சிதைத்துச் சிதறடித்து விட்டது. பதிலாக, எதேச்சாதிகாரத்தையும் அதிகார திமிரையும், ஆட்சிமுறை மேலாதிக்கத்தையும், சுருக்கமாகச் சொன்னால் சர்வாதிகாரத்தையும் அது கொண்டு வந்துவிட்டது.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக கட்டவிழும் இந்த கொடுங்கோன்மையின் பேரழிவு விளைவுகளைத்தான் நாடு இப்போது சந்தித்துக் கொண்டிருக்கின்றது. இந்த ஆட்சித் தலைமையை தலையில் வைத்துக் கொண்டாடி, அதன்மூலம் தங்கள் சொந்த அரசியலை தங்களுக்குச் சாதகமாகக் கொண்டு நடத்தலாம் என்று கற்பனை பண்ணியோர், அந்த ஆட்சித் தலைமையின் அதிகார வெறி மமதைக்கு ஈடு கொடுக்க முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களின் பிரதிபலிப்பைத் தான் அண்மைக்காலமாக நாம் தரிசிக்கின்றோம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று இந்தப் போக்கை நிரூபிக்கப் போதுமானது. 2019 ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கூட்டணியின் இணைத் தலைவராகத் தாம் அறிவிக்கப்பட்டார் என்றும், அதற்குப் பின்னர் – தேர்தல் முடிவடைந்த பின்பு – அந்தக் கூட்டணி குறித்து ஒரு வார்த்தை தானும் தன்னுடன் கலந்துரையாடப்படவில்லை என்றும் விசனிக்கின்றார் அவர்.

ஜனநாயகத்தின் அடிப்படையான கலந்துரையாடல் – சேர்ந்து பேசி முடிவு எடுத்தல் – கோட்டாபய நிர்வாகத்தில் இல்லவே இல்லை என்பதுதான் இன்று தென்னிலங்கை அரசியலில் அரசியல் குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் காரணம். அது வெளிப்படையான உண்மை.

பல கட்சிகளும் சேர்ந்து 'பிள்ளையார் பிடிக்கப்போய் அது குரங்காக முடிந்திருக்கின்றது'.

இறுக்கமான – உறுதியான – திடமான – முடிவுகளை எடுக்கக்கூடிய ஜனநாயகத் தலைமையைத் தேடியவர்கள், அவற்றுக்குப் பொருத்தமானவராகக் கோட்டாபயவைக் கொண்டு வந்து நிறுத்தியமையின் விளைவை அனுபவிக்கின்றார்கள்.

கோட்டாபயவோ தம்மைக் கொண்டு வந்தவர்களின் எதிர்பார்ப்புக்களை எல்லாம் தாண்டி, எதேச்சாதிகாரமாக, சர்வாதிகாரமாக முடிவுகளை எடுத்து, ஜனநாயகக் கட்டமைப்புக்கள் மீது அவற்றை வல்வந்தமாகத் திணிக்கும் கொடுங்கோல் சர்வாதிகாரியாக மாறினார்.

ராஜபக்ஷக்கள் தான்தோன்றித்தனமாக – தம்மிஷ்டப்படி – எடுக்கும் எதேச்சாதிகாரத் தீர்மானங்களை ஆட்சிக் கட்டமைப்பின் மீதும், நாட்டின் மீதும் ஒருதலைப்பட்சமாக – வல்வந்தமாக – திணித்தமையின் பிரதிபலிப்புகளைத்தான் நாம் இப்போது பார்க்கின்றோம்.

பெரும் புகழாரம் சூட்டி கொண்டு வந்தவர்களே இன்று திட்டித் தீர்த்து சபிக்கும் ஆளாக மாறியிருக்கின்றார். அப்படியான ஆட்சித் தலைவரின் வினைத்திறனைத்தான் நாடு இன்று பெரும் இக்கட்டாக அறுவடை செய்து கொண்டிருக்கின்றது.

## ஒரு நாடு – ஒரு சட்டம் தொடர்பான செயலணி; கடும் அதிருப்தி வெளியிட்ட இணை குழு!



ஒரு நாடு - ஒரு சட்டம் என்ற ஜனாதிபதி செயலணி, இலங்கையின் பன்மைத்துவ சமூகத்தைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அபாயம் உள்ளது என இலங்கை தொடர்பான கோர் குழு தெரிவித்துள்ளது.

மேலும் மேற்படி செயலணி அனைவரையும் உள்ளடக்கியது மற்றும் பாரபட்சமற்றது என்பதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் இலங்கையின் நிலைமை தொடர்பாக கனடா, ஜேர்மனி, வடக்கு மசிடோனியா, மலாவி, மொண்டினீக்ரோ, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இணை குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு இணங்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை கொண்டு வருவதற்கான முதல் முயற்சிகளைப் பாராட்டியுள்ள இணை குழு, 46/1 தீர்மா னத்தை நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றம் குறைவாக இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக காணாமல் போனோர் தொடர்பான முதற்கட்ட பட்டியல் வெளியிடப்பட்டதில் இருந்து, வழக்குகளை முழுமையாக விசாரிக்கும் பணியில், காணாமல் போனோர் அலுவலகம் மெதுவான முன்னேற்றம் கண்டு வருவது கவலையளிப்பதாக அறிவித்துள்ளது.

சிவில் சமூகத்தின் மீதான கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் பற்றி கவலை வெளியிட்டுள்ள கோர் குழு, ஊடகவியலாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மீதான அடக்குமுறை மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன என்றும் குற்றம்சாட்டியுள்ளது.

இதேவேளை, ஐ.நா. ஆணையாளருடன் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் 46/1 தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கத் தயார் என்றும் இணை குழு தெரிவித்துள்ளது.

## கடனைச் செலுத்துவதற்கான சகல மாற்றுவழிகளும் கருத்தில்!

### உள்ளன என்கிறார் மத்தியவங்கி ஆளுநர்



இலங்கை பெற்றுள்ள கடனைச் செலுத்துவதற்கான அனைத்து மாற்று வழிகளும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இலங்கைக்கு இன்னமும் கடன் செலுத்துவதற்கான வல்லமை காணப்படுவதாகவும் கூறினார்.

தமது தீர்மானங்களையும் கொள்கையையும் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஜனாதிபதிக்கும் நிதியமைச்சருக்கும் அவற்றை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய வங்கி என்ற அடிப்படையில் அதன் நிலைப்பாட்டையும் நாட்டுக்குச் செய்ய வேண்டிய விடயங்களையும் அரசியல் பேதம் இன்றி தெளிவுபடுத்தியிருப்பதாக அவர் கூறியுள்ளார். பணிப்புரை வழங்குவது மத்திய வங்கியின் பொறுப்பாகும். மத்திய வங்கி என்ற அடிப்படையில் அரசாங்கத்திடம் முன்வைக்கும் யோசனைகளைக் கருத்திற் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவற்றில் பெரும்பாலானவை தொழில்நுட்பம் சார்ந்த கோரிக்கைகளாகும் என்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்தார்.

## மாணவர்கள், பெற்றோர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க அரசின் தீர்மானங்கள் வழிவகுக்கும்!



அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வழிவகுக்கும் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வுகாணாமல் பாடசாலைகளை எதிர்வரும் 7 ஆம் திகதி திறப்பதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ள நிலையிலேயே அந்தச் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக பொதுப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை பல பாடசாலை பஸ்கள், வான்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பாகப் பல கவலைகள் இருக்கின்றன என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாடிய போதிலும் இதுவரையில் சாதகமான தீர்வு கிடைக்கவில்லை என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

## சித்திரங்களின் மூலம் இயற்கை சித்திரப் போட்டி



இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் 'சித்திரங்களின் மூலம் இயற்கை' என்னும் தலைப்பில் சித்திர போட்டி ஒன்றை நடாத்தி இருந்தது. யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் அமைந்து உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று(சனிக்கிழமை) தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் போட்டி நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சங்க உறுப்பினர்களும் சிறகுகள் அமைப்பினரும் கலந்துகொண்டிருந்தனர்.



# மூன்றாவது சுற்றுப் பேச்சு நடத்த ரஷ்யாவும் உக்ரைனும் தீர்மானம்

போரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து ரஷ்யாவும் உக்ரைனும் மூன்றாவது சுற்று பேச்சை மேற்கொள்ள தீர்மானித்துள்ளன. நாளை திங்கட்கிழமை இந்த மூன்றாம் சுற்று பேச்சு இடம்பெறவுள்ளதாக உக்ரேனிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையில் நேரடி பேச்சுக்களை ஊக்குவிப்பதாக சீன ஜனாதி பதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே பேச்சு மூலம் மட்டுமே நெருக்கடியை தீர்க்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அமெரிக்கா, நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யாவுடன் நியாயமான பேச்சுக்களை நடத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் விரிவாக்கம் குறித்து மொஸ்கோவின் பாதுகாப்பு தொடர்பான கவலைகளை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்



# பாகிஸ்தான் குண்டு வெடிப்புக்கு பொறுப்பேற்றது ஐ.எஸ்.ஐ.எஸ்.

பாகிஸ்தானின் பொவர் நகரில் உள்ள மசூதியில் நடந்த குண்டு வெடிப்பில், 56 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு, ஐ.எஸ்., பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

நம் அண்டை நாடான பாகிஸ்தானின் பொவர் நகரில், ஷியா பிரிவு முஸ்லிம்களின் மசூதி ஒன்று உள்ளது. நேற்று அங்கு சிறப்புத் தொழுகை நடந்தது. அப்போது திடீரென சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில், 56 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். காயம் அடைந்த 200க்கும் மேற்பட்டோர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு, ஐ.எஸ்., பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. ஆப்கானிஸ்தானை தலைமையிடமாக வைத்து செயல்படும் துணை அமைப்பான ஐ.எஸ்., கோரசான் பிரிவு இந்த தாக்குதலை நடத்தியுள்ளது. ஆப்கானிஸ் தானைச் சேர்ந்தவர், மனித வெடிகுண்டாக செயல்பட்டதாக, அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரஷ்ய நாட்டின் விமானத் தாக்குதல்களுக்கு மேற்குலக நாடுகள் உரிமம் வழங்குகின்றனவா?

## உக்ரைன் ஜனாதிபதி கேள்வி

உக்ரைன் மீது விமானங்கள் பறக்கத் தடை விதிக்க தொடர்ந்து மறுப்பதன் மூலம் ரஷ்ய விமா னத் தாக்குதல்களுக்கு மேற்குலக நாடுகள் உரிமம் வழங்குகின்றன என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலன்ஸ்கி குற்றம்சாட்டியுள்ளார். நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரை யாற்றிய ஸெலன்ஸ்கி, 'ரஷ்யப் படையெடுப்பின் தீவிரம் அதிகரிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை மேற்கு நாடுகளின் தலைவர்கள் அறிவார்கள். இந்நிலையில், உக்ரைன் மீது விமானங்கள் பறக்கத் தடைவிதிக்க மறுப்பதன் மூலம் நகரங்கள், மாநகரங்கள் மீது குண்டு வீச புடினுக்கு அவர்கள் உரிமம் வழங்குகிறார்கள்' என்று குற்றம்சாட்டினார்.

மேலும், தலைநகர் கீவ்வில் இருந்து உரை யாற்றியபோது, 'புதிய தாக்குதல்களும், இழப்புகளும் தவிர்க்கமுடியாதவை என்று தெரிந்தும், உக்ரைன் வான்பரப்பை மூட நேட்டோ வேண்டுமென்றே மறுக்கிறது' என கூறினார்.

உக்ரைன் 'வான் பறப்பில் விமானம் பறக்கத் தடை' அறிவிப்பு வெளியிடப்பட்டால், அதை மீறிப் பறக்கும் ரஷ்யப் போர் விமானங்களை நேட்டோ ஜெட் விமானங்கள் சுட வேண்டி வரும். இது உட னடியாக மூன்றாம் உலகப் போர் வித்திடும் என நிபுணர்கள் கூறுகின்றனர்





# இரண்டு நகரங்களில் தற்காலிக போர் நிறுத்தம்

உக்ரைனில் கடந்த 10 நாள்களாக போர் நடைபெற்று வரும் நிலையில் இரு நகரங்களில் தற்காலிக யுத்த நிறுத்தம் செய்வதாக ரஷ்யா அறிவித்தது.


இரு நகரங்களிலிருந்து மக்கள் பாதுகாப்பான அவ்விடத்தை விட்டு வெளியேற ரஷ்யா தற்காலிகமான போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டுள்ளது.

உக்ரைனுடனான 2ஆம் கட்ட பேச்சில் ஒப்புக்கொள்ளப்பட்ட படிவோல்னோவாகா, மரியுபோல் ஆகிய 2 நகரங்களில் போர் நிறுத்தப்படுவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது

# உக்ரைன் உட்கட்டமைப்புக்களை அழிக்கும் பணிகள் ஓரளவு நிறைவு என்கிறார் புடின்

ஆயுதக் கிடங்குகள், வெடிமருந்து கிடங்குகள், விமானப் போக்குவரத்து மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகள் உள்ளிட்ட உக்ரைனின் முக்கிய இராணுவ உட்கட்டமைப்புகளை இலக்குவைத்து அழிக்கும் பணிகள் கிட்டத்தட்ட நிறைவடைந் துள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் படைகள் தங்களுக்கு வழங்கப்பட்ட




அனைத்து கட்டளைகளையும் நிறைவேற்றும். உக்ரைனில் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை திட்டமிடப்பட்டவாறு தொடர்கிறது என ரஷ்ய விமான நிறுவனங்களின் பெண் விமானக் குழுவினருடருடன் நேற்று சனிக்கிழமை இடம் பெற்ற சந்திப்பில் புடின் கூறினார்.

மேற்கத்திய நாடுகளின் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் குறித்து இதன்போது கருத்து வெளியிட்ட புடின், அவை போர் அறிவிப்புக்கு ஒத்ததாக இருப்பதாகக் கூறினார்.

ரஷ்யாவில் அவசர நிலையை அறி முகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் வலியுறுத்தினார்.

உக்ரைனில் ஒரு விசேட இராணுவ நடவடிக்கையைதொடங்குவதுஎனஎடுக்கப்பட்ட முடிவு மிகக் கடினமானது. ஆனால் ரஷ்யாவுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை சமாளிக்க இது தவிர்க்க முடியாததாகிவிட்டது எனவும் ஜனாதி பதி புடின் கூறினார்.

உக்ரைன் நேட்டோவில் இணைந்தால் இது மேற்கு நாடுகளின் அத்துமீறல்களுக்கு வழிவகுக்கும். அத்துடன், உக்ரைன் கிரிமியா விற்குள் நுழையக்கூடும். இது ரஷ்யாவிற்கும் நேட்டோவிற்கும் இடையே நேரடி மோதல் களுக்கு வழிவகுக்கும் என புடின் எச்சரித்தார்.

இதேவேளை, உக்ரைனுடன் பேச்சுக்ளை தொடரவும் தயாராக இருப்பதாகவும் புடின் மேலும் கூறினார்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியாவின் பாதுகாப்பு பணியில் தனியார் நிறுவனங்களும் தேவை

## மத்திய உள்துறை அமைச்சர் தகவல்



இந்திய மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை (சி.ஐ.எஸ்.எவ்.) தோற்றுவிக்கப்பட்டதன் 53 ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு காசியாபாத்தில் நடைபெற்ற விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இந்தியா முழுவதும் பாதுகாப்பு பணியில் மத்திய தொழில்துறை பாதுகாப்புப்படை போன்ற அரசாங்கப் பாதுகாப்பு முகமைகள் மட்டும் பணியாற்றி தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாது என்றார். படிப்படியாக இந்தப் பணியை தனியார் பாதுகாப்பு நிறுவனங்களிடம் ஒப்படைக்க முடியும் என்று அவர் கூறினார்.

பல்வேறு தனியார் தொழில்துறை மற்றும் உற்பத்தித்துறை பிரிவுகளுக்கு பயனுள்ள பாதுகாப்பை வழங்குவதற்கு தனியார் பாதுகாப்பு நிறுவனங்களும், மத்திய தொழில்துறை பாதுகாப்பு படையும் இணைந்து பணியாற்ற முடியும் என்று அவர் குறிப்பிட்டார். தனியார் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு பயிற்சி அளிப்பது குறித்து, மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் உள்ள தொழில்துறை பிரிவுகளுக்கு அதிகரித்துவரும் ட்ரோன் தாக்குதல் உள்ளிட்ட அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு, அவற்றை எதிர்கொள்ளும் வகையில் தொழில்நுட்பத்தைத் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். இதற்கு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படை போன்றவற்றிற்கு சி.ஐ.எஸ்.எவ். ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா குறிப்பிட்டார்.



## புனே மெட்ரோ ரயில் திட்டம் ஆரம்பம் மாணவர்களுடன் பயணித்த பிரதமர் மோடி

நலத் திட்டங்கள் தொடக்கம் மற்றும் அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்பதற்காக மகாராஷ்டிரா மாநிலத்துக்குச் சென்றுள்ள இந்தியப் பிரதமர் மோடி, புனே நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரயில் திட்டத்தின் ஒரு பகுதியை தொடங்கி வைத்தார். மொத்தம் 32.2 கி.மீ. தூரம் கொண்ட இந்த திட்டத்தில் 12 கி.மீ. தூரத்திற்கு பணிகள் நிறைவு பெற்ற நிலையில், கார்வேர் கல்லூரி மெட்ரோ ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திட்டத்தை தொடங்கி வைத்ததுடன், அங்கிருந்து ஆனந்த் நகர் வரை மெட்ரோ ரயிலில் மோடி பயணம் செய்தார். மெட்ரோ ரயிலில் பள்ளி மாணவர்களுடன் பயணம் செய்த அவர் அவர்களுடன் கலந்துரையாடினார்.

இதைத் தொடர்ந்து புனே மாநகராட்சி வளாகத்தில் உள்ள சத்ரபதி சிவாஜி சிலையை இந்தியப் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

மகாராஷ்டிரா ஆளுநர் பகத் சிங் கோஷியாரி, புனே மேயர் முரளிதர் மொஹோல் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கொரோனா ஊரடங்கிற்குப்பின் திருப்பதியில் ஒரேநாளில் 67 ஆயிரம் பக்தர்கள் தரிசனம்



கொரோனாத் தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பக்தர்கள் தரிசனம் ரத்துச் செய்யப்பட்டது. தொற்றுப் பரவல் குறைந்ததால் ஜூன் மாதம் 300 ரூபாவுக்கான இணைய வழிப் பதிவுச் சீட்டு மட்டும் வழங்கப்பட்டு குறைந்த அளவில் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். கடந்த ஆண்டு மீண்டும் கொரோனாவின் இரண்டாவது அலை காரணமாக கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால், வாகனப் போக்குவரத்து முற்றிலும் தடை செய்யப்பட்டது. திருப்பதியில் ஊரடங்கு அமுலில் இருந்ததால் குறைந்த அளவு பக்தர்களே சுவாமியை தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இதனால் பக்தர்கள் கூட்டமின்றி திருப்பதி வெறிச்சோடிக் காணப்பட்டது.

இந்த நிலையில் தொற்றுப் பரவல் படிப்படியாக குறைந்ததால் பக்தர்கள் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கப்பட்டது. முதலில் 300 ரூபா கட்டணத்தில் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் இணைய வழியில் இலவச தரிசன சீட்டுகள் விநியோகிக்கப்பட்டு பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். தினசரி 25 ஆயிரம் பக்தர்கள் வரை தரிசனத்திற்கு சென்று வந்தனர்.

தற்போது முன்பதிவுகளின்றியும் நேரடியாக இலவச தரிசனத்திற்கு பக்தர்கள் அனுமதிக்க ஏற்பாடு செய்யப்பட்டு 3 இடங்களில் அதற்கான பதிவு நிலையங்கள் அமைக்கப்பட்டு, பக்தர்கள் தரிசனத்திற்கு சென்று வருகின்றனர். முதலில் ஐந்தாயிரம் பக்தர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது 300 ரூபா இலவச தரிசன டிக்கெட்டில் 25,000 பக்தர்களும், நேரடி இலவச தரிசனத்தில் 30,000 பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் தரிசனம் செய்யும் பக்தர்களின் எண்ணிக்கை கொரோனா ஊரடங்கு காலத்திற்கு முன்பு எந்த அளவுக்கு இருந்ததோ அதேபோல் வழக்கமான நிலைக்கு திரும்பியுள்ளது. நேற்று மட்டும் 67,750 பக்தர்கள் தரிசனம் செய்துள்ளனர். 30,192 பேர் முடி காணிக்கை செலுத்தினர். 3.13 கோடி ரூபா உண்டியலில் காணிக்கையாக கிடைத்துள்ளதாக ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.


## கடலூர் எம்.எல்.ஏ. அய்யப்பன் கட்சியில் இருந்து நீக்கம்

கடந்த சில நாள்களுக்கு முன் மேயர், துணை மேயர், பேரூராட்சி தலைவர், பேரூராட்சி துணைத் தலைவர், நகராட்சி தலைவர், நகராட்சி துணைத் தலைவர் பதவிக்கான தி.மு.கவின் உள்ளக தேர்தல் நடைபெற்றது. பல இடங்களை தி.மு.க. தனது கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கியிருந்தது. ஆனால், பல இடங்களில் திமு.கவின் பிரதிநிதிகள் தமது கூட்டணிக்கட்சிக்கு எதிராகவே போட்டிவேட்பாளர்களை நிறுத்தி வெற்றிபெற வைத்தனர். இதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில். கடலூர் கிழக்கு மாவட்டம், கடலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் என்பவர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியும், கட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் செயல்பட்டமையாலும் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுகிறார், எனக்குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் பிரதிநிதிகள் பொது வாழ்க்கையில் நெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்

### துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு தெரிவிப்பு



துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, கோவா மாநில தலைநகர் பனாஜிக்கு விஜயம் மேற்கொண்டு, அங்குள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

அங்கு அவர் உரையாற்றுகையில், அனைத்து மக்களும், குறிப்பாக மக்கள் பிரதிநிதிகள் பொது வாழ்க்கையில் கண்ணியத்தையும், தார்மீகத்தையும், நெறிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

நாடாளுமன்றம், சட்டசபைகளில் அமளி நடப்பது, சட்டசபையில் ஆளுநர் உரையின்போது குறுக்கிடுவது, சபைகளில் வன்முறைச் சம்பவங்கள் நடப்பது ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும். இத்தகைய சம்பவங்கள், ஜனநாயகத்தை பலவீனப்படுத்தி விடும். அத்துடன் மக்களும் அதிருப்தி அடைவார்கள்.

ஆளுநர் என்பவர் அரசியல் ரீதியான சட்டப் பதவியை வகிப்பவர். சட்டசபை என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு. நாடாளுமன்றம், சட்டம் இயற்றும் உயரிய அமைப்பு. எல்லா அமைப்புகளையும் மதிக்க வேண்டும்.

ஆளுநர் உரை பிடிக்காவிட்டால், அதை பிறகு விமர்சியுங்கள். பட்ஜட் பிடிக்காவிட்டாலும் விமர்சியுங்கள். ஆனால், அரசாங்கத்தைப் பிடிக்காவிட்டால், பொறுமை காக்க வேண்டும். அமைதியாக போராட வேண்டும். உங்கள் வாய்ப்பு வரும்வரை காத்திருக்க வேண்டும்.

மக்கள் தீர்ப்பை மதிக்கக்கூடிய பொறுமை வேண்டும். இதை எல்லா அரசியல் கட்சிகளும் மனதில் கொள்ள வேண்டும். வன்முறையை முற்றிலும் தவிர்க்க வேண்டும், என்று தெரிவித்தார்.

### பட்டிருப்பு, எருவில் பகுதியில் தேங்கிநிற்கும்

# வெள்ள நீரை வெளியேற்றுவதில் ஏற்பட்ட முரண்பாட்டுக்குத் தீர்வு



வெள்ள நீரை வெளியேற்றுவது தொடர்பில் பட்டிருப்பு மற்றும் எருவில் கிராம மக்களுக் கிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பலத்த மழை பெய்து வருகின்ற நிலையில் பெரும்பாலான தாழ் நிலப்பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளதனால் பொதுமக்கள் மிகுந்த இன்னல்களை எதிர் கொண்டு வருகின்றோம் என கவலை தெரிவிக் கின்றனர்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் அமைந்துள்ள தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதனால் பல வீடுகளுக்குள்ளும் நீர் புகுந்துள்ளது. இதனால் அங்குள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள், குழந்தைகள் என பல தரப்பட்டவர்கள் மிகுந்த இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அப்பிரதேசத்தில் அமைந்துள்ள பட்டிருப்பு, எருவில் பகுதியில் தேங்கிநிற்கும் வெள்ள நீரை வெளியேற்றுவதற்கு மண்முனை தென் எருவில் பிரதேச சபையினர் பக்கோ இயந்திரத்துடன் அந்த இடத்திற்கு வியாழக்கிழமை வருகை தந்தி ருந்தனர்.

எனினும் வெள்ள நீரை வெளியேற்றுவது தொடர்பில் பட்டிருப்பு மற்றும் எருவில் கிராம மக் களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

அவ்விடத்திற்கு வருதை தந்த மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை செயலாளர் சா.அறிவழகன், கிராம சேவை உத்தியோகஸ்த்தர், களுவாஞ்சிகுடி பொலிஸார் ஆகியோர் நிலமை லைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித் தனர்.

இறுதியில் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபேய விக்கிரம அங்கு நேரில் வந்து இரு கிராமத்தவர்களுடனும் கலந்துரையாடி மக்களுக்குப் பாதிப்பில்லாத வகையில் வெள்ள நீரை வெளியேற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கிய தற்கிணங்க பிரதேச சபையினரால் வெள்ளநீர் வெட்டி வெளியேற்றும் நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டது.

# மகளிர் தினத்தையொட்டி மட்டக்களப்பில் அருவி வலை அமைப்பினரால் நிகழ்வுகள்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண் கள் வலையமைப்பினால் மகளிர் தினத்தையொட்டி போட்டி நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடத்தப்பட்டன.

"பாராபட்சத்தை உடைத்தெறி – பெண் சமத்துவத்தை மதித்திடு" எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி இந்தப் போட்டி நிகழ்வு கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

அருவி பெண்கள் வலையமைப்பின் தலைவர் சட்டத்தரணி திருமதி.மயூரி ஜனன் இந்நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதி பரும் மாவட்ட செயலாளருமாகிய கே. கருணாகரன் பிரதம அதிதியாகவும், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு மாவட் டத்திலுள்ள 11 பிரதேச செயலக பிரிவுக ளில் உள்ள பிரதேச மட்ட அணிகள் எல்லே, கயிறு இழுத்தல் போட்டிகள் மற் றும் விளையாட்டு நிகழ்வுகளில் ஆர்வத்துடன் கலந்துகொண்டன.

இந்த நிகழ்வின் இறுதி போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிதொடக்கம் இடம்பெறுகின்றன. பெண் களுக்கான பல கண்காட்சிகள் மற்றும் புத்தாக்கங்கள் தொடர் பான பல நிகழ்வுகளும் பரிசளிப்பும் மைதானத்தில் இன்று இடம்பெற்று வருகின்றன.










## தொற்றா நோய்கள் தொடர்பில் மக்களுக்கு மட்டக்களப்பில் விழிப்புணர்வு நடவடிக்கை

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

'தொற்றா நோய்க்கு எதிராக ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் மட்டக் களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வழிகாட்டலில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மாவட்ட தொற்றா நோய் பிரிவு, அமிர் தகழி சித்தி விநாயகர் வித்தி யாலயம், மாமாங்கேஸ்வரா வித்தியாலயம் ஆகியன பொது மக்களை ஒன்றிணைத்து தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையை நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் முன்னெ டுத்தனர்.

இதையொட்டி மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய துவிச்சக்கர வண்டி பவனி காந்திபூங்காவை சென்றடைந்ததும் அங்கிருந்து மாணவர்கள் விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தியவாறு நடைபவனியை ஆரம்பித் தனர். அதனைத் தொடர்ந்து துவிச்சக்கர வண்டி பவனியும் இடம்பெற்று இருதரப்பினரும் தேவநாயகம் மண்டபத்தை சென்றடைந்ததும், பிரதான அரங்க நிகழ்வுகள் தேவநாய கம் மண்டபத்தில் இடம்பெற்றன. மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தி யர் ஜீ.சுகுணன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இவ் விழிப்புணர்வு நடவடிக்கை ளில் மாவட்ட அரசாங்க அதி பர் கே.கருணாகரன், மண் முனை வடக்கு பிரதேச செய லாளர் வீ.வாசுதேவன், மட்டக் களப்பு மாநகர ஆணையாளர் எம்.தயாபரன், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பிரதிப்பணிப்பாளர் என்.மயூ ரன், தொற்றாநோய் பிரிவின் பொறுப்பு வைத்தியதிகாரி எஸ். சிவநாதன், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி இளையதம்பி உதயகுமார், தொற்றுநோய்ப் பிரிவின் பொறுப்பு வைத்தியதிகாரி வீ. குணராசசேகரம், தாய்சேய் நல பிரிவின் வைத்திய பொறுப் பதிகாரி எம்.அச்சுதன் உள் ளிட்ட பலர் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர். சுகாதார துறைசார்ந்த உத்தியோகத் தர்கள், ஆசிரியர்கள், மாணவர் கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு விழிப்புணர்வு செயற்பாட்டில் பங்கேற்றிருந்தனர்.

## திருக்கோவிலில் இளைஞர் கைது

திருக்கோவில் பிரதேசத்தில் கோவில், தேவலாயங்களை வீடியோ பதிவு செய்த இளைஞரை திருக்கோவில் பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் நேற்றுக் கைது செய்துள்ளனர்

திருகோணமலையை பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய மொகம்மட் அஸாரூதின் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரை தடுத்து வைத்து விசார ணைகளை மேற்கொண்டு வருவதோடு இன்றைய தினம் அக் கரைப்பற்று நீதிவான் முன் அவரை ஆஜர்படுத்த உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டு. மாநகர ஆணையாளருக்கு எதிராக மாநகரசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

மட்டக்களப்பு மாநகரசபையில் மாநகர ஆணையா ளரின் செயற்போக்குகளுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மட்டக்களப்பு மாநகரசபையின் 58வது சபை அமர்வு நேற்று சபை முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உள்ளிட்ட மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பதில் செயலாளர், கணக்காளர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பல்வேறு செயற்திட்டங்கள் தொடர் பிலான முன்மொழிவுகளுக்கான அங்கீகாரங்கள் பெறப்பட்டன. பல்வேறு தீர்மானங்களும் நிறைவேற் றப்பட்டன.

விசேடமாக இந்த அமர்வின் ஆரம்பத்தில் தற்போது நிலவும் மின்சாரத்தடைக்கு எதிர்ப்பு வெளியிடும் முக மாக மாநகரசபை உறுப்பினர்கள் சிலர் மெழுகுவாத்தி ஏந்தி சபை அமர்வில் கலந்துகொண்டனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மாநகர ஆணையாளர் ஊழியர்களைத் தன் சொந்த வேலைக் காகப் பயன்படுத்தியமை தொடர்பில் பேசப்பட்டது. மாநகரசபையின் சுகாதாரக் குழுவின் தலைவர் சில கருத்துகளை முன்வைத்தார். மாநகர ஆணையாளர் சுகாதாரத் தொழிலாளர்களையும், மேற்பார்வை யாளர்களையும் தன் சொந்த வேலைகளுக்குப் பயன்படுத்துகிறார் எனவும், அதற்கு ஒத்துழைக் காதவர்களுக்கு இடமாற்றம் வழங்குவது, அவர்களைப் பழிவாங்குவது போன்ற செயற்பாடுகளை மேற் கொள்கிறார் எனவும் தெரிவித்து, மாநகர ஆணையா ருடன் தொடர்ந்து சேவையாற்ற முடியாது என்பதால் அவரை மாற்றம் செய்யுமாறும் கோரி பிரேரணை ஒன்றை முன்வைத்தார். இந்தப் பிரேரணை தொடர்பில் உறுப்பினர்கள் மத்தியில் பலத்த வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று சில நிமிடங்கள் சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து மாநகர முதல்வரினால் சபை அமைதியடையச் செய்யப்பட்டு, அந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

வாக்கெடுப்பில் 24 உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாகவும், 09 உறுப்பினர்கள் எதிராகவும் வாக் களித்தனர். ஏனையோர் வாக்கெடுப்பில் பங்கெடுக்காம லும் நடுநிலையாகவும் செயற்பட்டனர். இதன்படி அந்தப் பிரேரணையானது 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இரு அமைச்சர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை ஜனாதிபதியின் தன்னிச்சையான தீர்மானம் அல்ல!

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறுகிறார்

இரு அமைச்சர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை ஜனாதிபதியின் தன்னிச்சையான தீர்மானம் அல்ல என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் மற்றும் பிரதமருடனான சந்திப்பின் பின்னர் ஜனாதிபதியால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என அவர் கூறினார். யாரேனும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றவில்லை என்றால், அந்த வாய்ப்பை சிறப்பாகச் செய்யக்கூடிய ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் கூறினார்.

ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்ட போதிலும் பிரதமர் கலந்துரையாடலில் பிரசன்னமாகியிருந்தார் என இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மேலும், எரிபொருள் மற்றும் எரிவாயுக்கான வரிசைகள் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு தற்போதைய மின் நெருக்கடியை எரிசக்தி அமைச்சு தவிர்த்திருக்க முடியும் எனக் கூறினார்.

# கொழும்புத் துறைமுக நகரத்தில் பணமோசடிக்கு சந்தர்ப்பமில்லை

கொழும்பு துறைமுக நகரத்தில் பணமோசடிக்கு எவ்வித இடமுமில்லை எனவும், அவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராகக் கடுமையான சட்டங்களை அமுல்படுத்த முடியுமெனவும் துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகமும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளருமான கலாநிதி பிரியத் பந்து விக்கிரம தெரிவித்தார்.

துறைமுகநகரமும் எதிர்கால பொருளாதாரமும் என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். கலாநிதி பிரியத் பந்து விக்கிரம மற்றும் துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழுவின் உறுப்பினர் சாலிய விக்ரமசூரிய ஆகியோர் கலந்துகொண்ட ஊடக சந்திப்பை ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க நடத்தினார்.

துறைமுக நகரத்தின் அடிப்படை பௌதிக நிர்மாணப் பணிகள் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டு, முதற்கட்டப் பணிகள் நிறைவடையும் என கலாநிதி பிரியத் பந்து விக்கிரம தெரிவித்தார்.

இதுவரை, நிதி முகாமைத்துவம், வங்கி நடவடிக்கைகள், முதலீட்டு பதிவு மற்றும் குறித்த சட்ட விதிமுறைகள் முடிக்கப்பட்டுள்ளன. சுற்றுச் சூழலுக்கு உகந்த மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட துறைமுக நகர மேம்பாடு மற்றும் அது தொடர்பான அபிவிருத்தி விதிமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, அவை விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர், எந்தவொரு முதலீட்டாளரும் மேற்படி சட்ட மற்றும் விதிமுறைகளின் பிரகாரம் முதலீடு செய்யலாம்.

துறைமுக நகர் முழுமையாக, இலங்கைக்குரிய இந்நாட்டு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு நிலமாக இருப்பதோடு, அதன் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற, துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு இலங்கையின் அரசாங்கம், ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இதில் சீன நிறுவனம் முதலீடு செய்தாலும், அந்த நிலம் எந்த வெளிநாட்டுக்கும் சொந்தமானது அல்ல, குத்தகை அடிப்படையில் அதில் உள்ள காணிகளை எந்தவொரு நாட்டின் நிறுவனத்துக்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

துறைமுக நகர் என்பது யாருடைய புவிசார் அரசியல் தேவைகளுக்கான நிலம் அல்ல எனவும், அதன் ஒரே நோக்கம் வர்த்தகம் மற்றும் வணிக நடவடிக்கைகள் மட்டுமே எனவும் பிரியத் பந்து விக்கிரம மேலும் தெரிவித்தார். வர்த்தகம் தொடர்பான பரிவர்த்தனைகள் மட்டுமே இங்கு நடைபெறுகின்றன. யாருக்கும் சிறப்பு முன்னுரிமை இல்லை. முதலீட்டாளர்களைக் கையாள்வது பொருளாதார ஆணைக்குழு மூலம் இடம்பெறுகிறது.

'துறைமுக நகரம் பொதுமக்களுக்குத் தடை விதிக்கப்பட்ட ஒரு வலயமாகும்' என்ற கருத்தை நிராகரித்த பிரியத் பந்து விக்கிரம , இலங்கையில் உள்ள எவரும் துறைமுக நகருக்குள் இலவசமாகப் பிரவேசிக்கலாம் என்றார். தற்போதுள்ள எந்தக் கடைகளில் இருந்தும் பொருள்களை கொள்வனவு செய்யவும் மற்றும் முதலீடு செய்யவும் வாய்ப்புள்ளது. அதன் பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை பொலிஸ் திணைக்களம் மேற்கொள்கிறது.

இந்நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைப்பதில் துறைமுக நகரம் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் எனவும், இதில் பணியாற்றுவதன் மூலம் இந்நாட்டு மக்கள் அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும் எனவும், இதனை மக்கள் நேர்மறையாகப் பார்க்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த பிரியத் பந்து விக்கிரம, துறைமுக நகரத்தில் எந்தவொரு வெளிநாட்டு நாணயத்தையும் பயன்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார். அதேபோன்று எந்தவொரு இலங்கையரும் இலங்கையில் செல்லுபடியாகும் நாணயங்களைப் பயன்படுத்தி பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. அதன் ஊழியர்களில் 25 சதவீதமானவர்கள் வெளிநாட்டுப் பணியாளர்களாகத் தொழில்களுக்கு விண்ணப்பிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதோடு, அதன் மூலம் அவர்களின் சிறப்பான அறிவை உள்நாட்டு தொழிலாளர்களுக்குப் பெற்றுக்கொள்ளவும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும். ஏற்கனவே பல முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும், உயர்மட்ட முதலீட்டாளர்களில் இந்நாட் டிற்கு அதிக வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் ஆணைக்குழுவின் உறுப்பினர் சாலிய விக்ரமசூரிய தெரிவித்தார்.

# நாட்டை இந்தியாவுடன் இணைக்குக கிளிநொச்சி விவசாயி தெரிவிப்பு!



ஆளும் கட்சி நாட்டை நடத்த முடியாமல் இருக்கின்றது. எதிர்க்கட்சியினராலும் நாட்டை நடத்த முடியாது போல் உள்ளது. அவ்வளவு கடன் பிரச்சினை. இந்தியாவுடன் நாட்டை இணைத்துவிட்டு இருவரும் வெளியேறினால் நல்லது என கிளிநொச்சி விவசாயி ஒருவர் தனது ஆதங்கக் கருத்தைத் வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்ள மக்கள் முண்டியடிப்பதுடன், நீண்ட வரிசையில் காத்திருக்கின்ற காட்சிகள் நேற்றும் பதிவாகின.

பெற்றோல் பெற்றுக் கொள்ள நீண்ட வரிசை காணப்படுகின்ற போதிலும், தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவு பெற்றோல் மக்களுக்குக் கிடைக்கின்றது.

ஆனால் டீசல் பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்படுகின்றது. கொண்டு வரப்படும் டீசல் மக்களின் தேவைகளை முழுமையாகப் பூர்த்திசெய்ய முடியவில்லை. இதனால் டீசலைப் பெற்றுக்கொள்ள நூற்றுக்கணக்கான வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக உழவு இயந்திரங்கள் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், கொள்கலன்களில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில் மக்கள் அரசு மற்றும் எதிர்க்கட்சி தொடர்பில் விசனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

ஆளும் கட்சி நாட்டை நடத்த முடியாமல் இருக்கின்றது. எதிர்க் கட்சியாலும் நாட்டை நடத்த முடியாது போல் உள்ளது. அவ்வளவு கடன் பிரச்சினை. இந்தியாவுடன் நாட்டை இணைத்துவிட்டு இருவரும் வெளியேறினால் நல்லது என கிளிநொச்சி விவசாயி ஒருவர் தனது ஆதங்கக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, காலபோக செய்கையில் பாரிய நட்டம் தமக்கு ஏற்பட்டதாகவும், சிறுபோகத்தில் ஈடு செய்யலாம் என எண்ணிய போது தற்பொழுது எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாது இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். பசளை தட்டுப்பாடும், எரிபொருள் தட்டுப்பாடும் தமக்கு பெரும் சவாலாகக் காணப்படுகின்றமையால், எதிர்காலத்தில் விவசாயத்தை முழுமையாகக் கைவிட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# பாலமொன்றுக்கு அடியில் மனித எச்சங்கள் மீட்பு!

பிங்கிரிய போவத்த கொலமுன ஓயா பாலத்துக்கு அடியில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மற்றும் மனித எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பிங்கிரிய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே மேற்படி மோட்டார் சைக்கிள் மற்றும் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மோட்டார் சைக்கிள் இலக்கத்தை ஆராய்ந்ததில் மோட்டார் சைக்கிளும் மோட்டார் சைக்கிளின் உரிமையாளரும் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என 07.12.2021 அன்று பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின்படி தெரியவந்துள்ளது. பின்னர் மோட்டார் சைக்கிள் இருந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது மனித மண்டை ஓடு மற்றும் பல எலும்புத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. பின்னர், மோட்டார் சைக்கிள் காணாமல் போன தமது மகன் பயன்படுத்தியது என மனுதாரர்கள் அடையாளம் கண்டுள்ளனர். காணாமல் போனவர் பிங்கிரிய, திசோகம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இந்த எலும்புகள் சம்பவ இடத்தில் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். நீதிவான் விசாரணை நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றதுடன், பிங்கிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கோட்டை மாநகர சபை ஊழியர் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

கோட்டை மாநகர சபை ஊழியர்கள் வெலிக்கடையில் உள்ள மேம்பாலத்தின் கீழ் பத்தரமுல்லை நோக்கிய வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோட்டை மாநகர சபை ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் நீதி வழங்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்தி மேற் படி குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கோட்டை மாநகர சபை ஊழியர் ஒருவர் வெள்ளிக்கிழமை வீதியில் குப்பைகளை சேகரிக்கும் போது மோட்டார் வாகனத்தில் வந்த ஒருவரால் தாக்கப்பட்டார் என ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பொலிஸில் முறைப்பாடு செய்த போதிலும் நீதி கிடைக்கவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக நாவல வீதியின் போக்குவரத்து தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.03.2022இல் வெளியிடப்பெற்றது.